


தொடர் விடுமுறை என்பதால் சொந்த ஊருக்கு திரும்பும் பொதுமக்களால் சென்னை பெருங்களத்தூர் ஜி.எஸ்.டி. சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

கமுதி அருகே பரிதாபம்

மின்சாரம் தாக்கி அக்காள், தம்பி சாவு

போலீஸ் விசாரணை

கமுதி, அக். 3

கமுதி அருகே இரும்பு கம்பிகளை பிடித்து விளையாடிக் கொண்டிருந்த அக்காள், தம்பி மின்சாரம் தாக்கி பலியானார்கள்.

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகே உள்ள அச்சங்குளத்தை சேர்ந்தவர் மோகன்தாஸ். இவரது மகள் நிறைமதி(10) 5–ம் வகுப்பு படித்து வந்தார். மகன் பாலபிரவீன்(6) 1–ம் வகுப்பு படித்து வந்தார்.

இன்று காலை அங்குள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இரும்பு கம்பிகளை பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது இருவர் மீதும் மின்சாரம் பாய்ந்தது. இதில் சம்பவ இடத்திலேயே அக்காள், தம்பி இருவரும் பலியானார்கள்.

இது குறித்து அபிராமம் போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. போலீசார் அங்கு சென்று இரண்டு பேர் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கமுதி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இந்த சம்பவம் பற்றி வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். மின்சாரம் தாக்கி அக்காள், தம்பி பலியான சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஆரல்வாய்மொழியில்

வீட்டை இடித்து குடும்பத்தினர் மீது கொலைவெறி தாக்குதல்

எஸ்.பி.யிடம் இளம்பெண் புகார்

நாகர்கோவில், அக். 3,

கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி கிறிஸ்துநகர்கிழக்கு பகுதியைச் சேர்ந்த ஜெயராஜ் மகள் ஜெனிஷா (24). இவர் நேற்று தனது உறவினர்களுடன் நாகர்கோவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார்மனு அளித்தார். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:



கடந்த 27ந்தேதி கிறிஸ்துநகர் பகுதியைச் சேர்ந்த திரவியராஜன் குடும்பத்தினர், எங்கள் தெருவில் உள்ள பள்ளங்களில் மண் நிரப்புவது தொடர்பாக பிரச்சினையில் ஈடுபட்டனர். இதனால் ஏற்பட்ட வாய்த்தகராறு பின்னர் மோதலாக மாறியது.

இதில் திரவியராஜன், சதீஷ் உள்ளிட்ட 13 பேர் சேர்ந்து கம்பு, இரும்புக் கம்பி உள்ளிட்ட ஆயுதங்களால் எனது தாய், தந்தை மற்றும் சகோதரரை தாக்கினர். இதில் எனது தாயின் வயிற்றில் தாக்கியதில் அவர் காயமடைந்தார். மேலும், எங்கள் வீட்டையும் இடித்து தரைமட்டமாக்கியதுடன், வீட்டில் இருந்த சுமார் ரூ.5 லட்சம் மதிப்பிலான பொருட்களையும் சேதப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். இது குறித்து ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. புகாரின் அடிப்படையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் எனது தந்தையிடம் வாக்குமூலம் பெறுவதற்காக காவலர் ஒருவர் சென்றுள்ளார். அப்போது, எனது தந்தை தெரிவித்த குற்றச்சாட்டுகளை முறையாக பதிவு செய்யாமல், அவரை மிரட்டி கையெழுத்து பெற்றதாக கூறப்படுகிறது. மேலும், சம்பவம் தொடர்பாக சரியான முறையில் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை. எனவே, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உரிய விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டப்படி உரிய வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் ஜெனிஷா கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில்

தாயுமானவர் திட்டத்தில் ரேசன் பொருட்கள் விநியோகம்

5–ந் தேதியும் வழங்கப்படுகிறது

சிவகங்கை, அக்.3

சிவகங்கை மாவட்டத்தில் தாயுமானவர் திட்டத்தின்கீழ் அக்டோபர் மாதத்திற்கான ரேசன் பொருட்கள் விநியோகம் செய்யப்பட உள்ளது. 65 வயதிற்கு மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், சர்க்கரை உள்ளிட்ட' அத்தியாவசிய பொருட்கள் நாளை(அக்.3) மற்றும் 5ஆம் தேதி வீடு வீடாக சென்று விநியோகம் செய்யப்பட உள்ளது.

அத்தியாவசிய பொருட்களை தங்கள் இல்லங்களுக்கே நேரில் வந்து தொடர்புடைய நியாயவிலைக்கடை விற்பனையாளர்களால் விநியோகம் செய்யப்படும்.

தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்கள் இத்திட்டத்தினை பயன்படுத்தி பயனடையலாம். என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில்

விடுபட்ட வாக்காளர்கள் பெயர் சேர்க்க சிறப்பு முகாம்கள்

கலெக்டர் தகவல்

ராமநாதபுரம், அக்.3

ராமநாதபுரம் கலெக்டர் சிவகுரு பிரபாகரன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இந்திய தேர்தல் ஆணையம் தனது 29.09.2026ம் தேதியிடப்பட்ட கடிதத்தின் வாயிலாக, "சிறப்பு தீவிரத் திருத்தப் பணி" ஏற்கனவே நிறைவடைந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சில முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளது. தொடர்திருத்தநடைமுறையின் கீழ், விடுபட்ட வாக்காளர்கள் மற்றும் இளம் / முதல் முறையாகத் தகுதிபெறும் வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான சிறப்பு முகாமினை தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

படிவம் 6உடன் இணைக்கப்பட்டுள்ள உறுதிமொழிப் படிவம் சிறப்புத் தீவிரத் திருத்தக் (எஸ்.ஐ.ஆர்.) காலத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

சிறப்பு தீவிரத் திருத்தம் அல்லாத காலக்கட்டங்களில் வாக்காளர் பதிவு விதிகள் 1960ன் படி பொருந்தக்கூடிய படிவங்கள் பயன்படுத்தப்படும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாத்தூர் அருகே

லாரியின் பின்னால் பஸ் மோதி விபத்து

டிரைவர் உள்பட 5 பேர் படுகாயம்

சாத்தூர். அக். 3

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் இருந்து மதுரை நோக்கி சென்ற தனியார் பேருந்தில் 10க்கு மேற்பட்ட பயணிகள் பயணம் செய்து உள்ளனர். மேலும் தனியார்பேருந்தை சிவகங்கை பகுதியை சேர்ந்த ராமசாமி என்பவர் ஓட்டி வந்து உள்ளார்.



இந்த நிலையில் ராமசாமி ஓட்டி வந்த தனியார் பேருந்து சாத்தூர் அருகே சாய்பாபா கோவில் அருகே சென்று கொண்டிருந்த போது முன்னாள் சென்ற லாரியை முந்தி செல்வதற்கு இடது பக்கம் பேருந்தை திருப்பிய போது சாலை ஒரத்தில் நின்று கொண்டிருந்த ஹரியானா மாநிலத்தை சேர்ந்த கன்டெய்னர் லாரியின் பின்புறம் எதிர்பாராத விதமாக பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது

இந்த விபத்தில் தனியார் பேருந்து ஓட்டுனர் உட்பட பேருந்தில் பயணம் செய்த 5 பயணிகள் காயமடைந்தனர் .

மேலும் விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சாத்தூர்தாலுகாகாவல்நிலைய போலீசார் விபத்தில் காயமடைந்த ஓட்டுநர் மற்றும் பயணிகளை மீட்டு சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர் .

இந்த நிலையில் விபத்து நடந்த இடத்தில் போலீசார் விசாரணை நடத்திய போது பேருந்து மோதிய கண்டெய்னர் லாரி மாயமானது அறிந்து அதிர்ச்சி அடைந்தனர்.

மேலும் தப்பிச்சென்ற கண்டெய்னர் லாரியை போலீசார் விரட்டி சென்று சாத்தூர் சுங்கச்சாவடி அருகே பிடித்து காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தனர்.

மேலும் கண்டெய்னர் லாரியை ஓட்டி சென்ற பீகார்மாநிலத்தைச்சேர்ந்த ஓட்டுநரிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் இந்த விபத்து குறித்து சாத்தூர் தாலுகா போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

ராஜபாளையத்தில்

22 கிலோ குட்கா பொருட்கள் பறிமுதல்

ராஜபாளையம், அக்.3

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்திற்கு ரயில்வே பீடர் சாலையில் உள்ள தனியார்; டிரான்ஸ்போர்ட் அலுவலகத்திலிருந்து குட்கா பொருள் பார்சல் வந்திருப்பதாக தகவல் சொல்லிவுள்ளனர்.

அதனடிப்படையில் காவல் சார்பு ஆய்வாளர் முருகராஜ் தலைமையில் காவல் துறையினர் சென்று சோதனை போட்டனர். குட்கா பொருட்கள் அடங்கிய பார்சல் வந்திருந்தது தெரியவந்தது.

இதையடுத்து குட்கா பொருட்களை கைப்பற்றி கர்நாடக மாநிலம் பெங்களூரைச் சேர்ந்த இந்திரசூர்யவான்சி, அயுபக்கான் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து தேடி வருகின்றனர்.

உசிலம்பட்டி தாசில்தார் அலுவலகம் முன்பு

மூதாட்டி நூதன போராட்டம்

அடிப்படை வசதி கேட்டு



உசிலம்பட்டி, அக்.3

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம் பாப்பாப்பட்டி கிராமம் பேயம்பட்டி சேர்ந்த தர்மர் மனைவி மணியம்மாள் (67)தன்னுடையவீட்டிற்கு பாதை அமைத்து தர கோரி வட்டாட்சியர் அலுவலகம் உள்ளே பாய் விரித்து படுத்து போராட்டம் நடத்திவருகின்றார். போலீசார் மற்றும் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். மணியம்மாள் தனது வீட்டுக்கு செல்வதற்கு பாதை மற்றும் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை குடிநீர் சாக்கடை வசதி அனைத்தையும் அருகில் உள்ளவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் எனக் கூறி பல்வேறு அலுவலகங்கள் மற்றும் இடங்களில் மனுக்கள் கொடுத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை. தொட ர்ந்து உசிலம்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் பாயை விரித்து படுத்துள்ளார்.

பல வருடமாக மனுக்கள் கொடுத்தும் எந்த பலனும் இல்லாத தால் நேற்று காலை வட்டாச்சியர் அலுவலகத்தில் நுழைவு வாயிலேயே பாதையை மறித்துப்படுத்துள்ளார். அதிகாரிகள் எனக்கு தெருவை அளந்து வீட்டுக்கு பாதை அமைத்து தருமாறு தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்.

திருமணமான 3 மாதத்தில்

பட்டதாரி இளம்பெண் தீக்குளித்து சாவு

துறையூர், அக். 3

திருச்சி மாவட்டம் துறையூர் மதுராபுரி விரிவாக்க பகுதியில் வசித்து வருபவர் சந்தோஷ் குமார். இவரது மனைவி அபிநயா வயது 33. எம்.ஏ., பட்டதாரியான இவர் முசிறி சப் கோர்ட்டில் உள்ள இ சேவை கேந்திரியாவில் பணியாற்றி வருகிறார்.

கடந்த 13 ஆண்டுகள் முன்பு திருமணம் முடிந்த நிலையில் 12 வயதில் லிவிஸ்ரீ என்ற பெண் குழந்தை உள்ளது. கடந்த 2015 ஆம் ஆண்டு கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து தனது மகளுடன் தனியாக வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த ஜூன் மாதம் சந்தோஷ் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டு மதுராபுரி விரிவாக்க பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார். இந்நிலையில் புதுமனத் தம்பதிகள் இருவருக்கும் அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டு சண்டை நடந்துள்ளதாக தெரிகிறது. இதனால் நேற்று முன்தினம் மாலை வேலைக்கு சென்று இரவு 8மணி அளவில் வீட்டுக்கு வந்த அபிநயாவிற்கும் சந்தோஷ் குமாரருக்கும் இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் மனமுடைந்த அபிநயா வீட்டில் வைத்திருந்த மன்னனையை தனக்குத்தானே ஊற்றிக் கொண்டு தீ வைத்துள்ளார். இவரின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் மீட்டு துறையூர் தனியார் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று மாலை அபிநயா பரிதாபமாக உயிரிழந்தார். இ??து பற்றி அபிநயாவின் தாய் ராஜம்மாள் கொடுத்த புகாரின் பேரில் துறையூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

காந்தியடிகள் பிறந்தநாள் காமராஜர் நினைவு தினம்

டி.டி.வி. தினகரன் அறிக்கை

சென்னை, அக். 3:

காந்தியடிகள் பிறந்தநாள், பெருந்தலைவர் காமராஜர் நினைவு தினத்தையொட்டி

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது:

ஆங்கிலேயர்களை எதிர்த்து அறவழியில் போராடி, இந்தியாவின் விடுதலைக்கு வித்திட்டவரும், அகிம்சை எனும் மந்திரத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தி, அதன் மூலம் வரலாற்றையே புரட்டிப்போட்டவருமான தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் பிறந்த தினம் இன்று.

எளிமையான வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை, சமூக சமத்துவம், தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் ஆகியவற்றோடு, சத்தியத்தை ஆயுதமாகவும், அகிம்சையைப் பாதையாகவும் கொண்டு, மானுட நலனுக்காகவும், உயர்வுக்காகவும் ஓயாமல் உழைத்த மகாத்மா காந்தியடிகளை எந்நாளும் போற்றி வணங்கிடுவோம்.

காமராஜர் நினைவு தினம் தமிழக அரசியல் வரலாற்றில் நேர்மை, எளிமை, தூய்மை மற்றும் மக்கள் நலன் ஆகியவற்றின் அடையாளமாகத் திகழ்ந்த பெருந்தலைவரும், அரசியல் அதிகாரத்தைத் தனக்காகப் பயன்படுத்தாமல், மக்களின் முன்னேற்றத்திற்காகவும், எதிர்காலத் தலைமுறைகளுக்காகவும் அர்ப்பணித்த வருமான கல்விக் கண் திறந்த கர்மவீரர் காமராஜர் நினைவு தினம் இன்று.

எளிய குடும்பத்தில் பிறந்து, விடுதலைப் போராட்ட வீரராக வாழ்க்கையைத் தொடங்கி, தன்னலமற்ற உழைப்பாலும், தியாகத்தாலும் இந்திய அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்கிய உன்னதத் தலைவர் காமராஜர் ஆற்றிய அரும்பெரும் பணிகள் தலைமுறைகள் கடந்தும் நிலைத்திருக்கும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

அலங்காநல்லூர் அருகே

தூக்குப்போட்டு தம்பதி தற்கொலை

குடும்பத் தகராறில் விபரீதம்

அலங்காநல்லூர், அக் 3

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே அச்சம்பட்டி, முருகன் கோவில் பகுதியை சேர்ந்த தம்பதியினர் சந்தோஷ் (36), பிரியதர்ஷினி (28).இவர்களுக்கு திருமணமாகி 8 ஆண்டுகள் ஆன நிலையில் 7 வயது மற்றும் 3 மாத கை குழந்தை என இரண்டு பெண் குழந்தைகள் உள்ளன சந்தோஷ் கட்டிட வேலை செய்து வருவதாகவும் சமீபத்தில் சந்தோஷ் சரியாக வேலைக்கு செல்லாமல் இருந்து வந்ததாகவும் இதனால் கணவன் மனைவியிடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் பிரியதர்ஷினி கோபித்துக் கொண்டு தாயார் வீட்டிற்கு சென்றதாகவும் சில தினங்க ளுக்கு முன்பு தான் சந்தோஷ் மனைவியிடம் சமரசம் செய்து தனது வீட்டிற்கு அழைத்து வந்ததாகவும் கூறப்படு கிறது. இந்த நிலையில் நேற்று மீண்டும் இருவருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும் இதில் பிரியதர்ஷினி வீட்டில் யாரும் இல்லாத நிலையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்தகவல் அறிந்த அவரது கணவர் சந்தோசும் அருகிலுள்ள ஒரு வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மேலும் சம்பவம் அறிந்து அங்கு வந்த அலங்காநல்லூர் போலீசார் இறந்த கணவன் மனைவி உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து தம்பதி இறப்பு குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குடும்பத் தகராறில் கணவன் மனைவி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Altum® Credo Home Finance

ஆல்டம் கிரெடோ ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

பதிவு. அலுவலகம்: தளம் எண் 7, கல்பதரு இன்ஃபினியா, ப்ளாட் எண் 22, துணை ப்ளாட் எண் 3, சி.டி.எஸ் எண் 15/1, பமுர்டா கிராமம், வாக்டேவாடி, சிவாஜி நகர், புனே நகரம், மகாராஷ்டிரா 411005

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான ஏல அறிவிப்பு

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணையப் பற்றுரிமையை அமல்படுத்துதல் சட்டம், 2002-இன் கீழ், பிணையப் பற்றுரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8(6) மற்றும் 9(1)-இன் நிபந்தனையுடன் சேர்த்துப் படிக்கப்படும் அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான ஏல அறிவிப்பு. இதன்மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள கடன் வாங்கியவர்(கள்), இணை-கடன் வாங்கியவர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோருக்கும் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து(கள்) ஆல்டம் கிரெடோ ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு அடமானம்/பற்று வைக்கப்பட்டுள்ளது. இனிமேல் ACHFL என அறியப்படும் லிமிடெட் நிறுவனத்தின், பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவரான அதன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கைவசப்படுத்தப்பட்ட பொருளானது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனாளி(கள்), இணை-கடனாளி(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து, ACHFL-க்குச் சேர வேண்டிய எதிர்கால வட்டி, செலவு மற்றும் கட்டணங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வசூலிப்பதற்காக, **10/11/2026 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 11:30 மணி முதல் மாலை 4:30 மணி வரை "உள்ளபடியே, இருக்கும் இடத்தில்," "உள்ளபடியே, உள்ளதை உள்ளபடி," மற்றும் "இருப்பவை அனைத்தும்"** என்ற அடிப்படையில் விற்கப்படும்.

வ எ ண்.	கடன் வாங்குபவர்(கள்) / இணை-கடன் வாங்குபவர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) பெயர் கடன் கணக்கு எண்.	13(2) அறிவிப்புத் தொகை மற்றும் தேதி	வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் (பாதுகாக்கப் பட்ட கடன்)	ஒதுக்கீட்டு விலை / முன் பண வைப்புத் தொகை	டெண்டர்(கள்) திறக்கும் தேதி(கள்) மற்றும் நேரம்	உடைமை வகை
1.	ஆண்டனி ஆண்டனி (கடன் வாங்குபவர்) ஜீவமணி அன்பு மலர் (கூட்டுக் கடன் வாங்குபவர்) கணக்கு எண். 159202000019	ரூ. 11,34,195/- 7-ஏப்ரல்-2026	ரூ. 12,94,080.00/- NPA தேதி : 31-மார்ச்-2026	ரூ. 17,25,335/- / ரூ. 1,72,534/-	10 நவம்பர் 2026 (சனிக்கிழமை) (காலை 11:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை)	குறியீட்டு உடைமை
	பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரம்: பாளையம்கோட்டை பதிவு மாவட்டம், புர்கித்மநகரம் துணைப் பதிவாளர் அலுவலகம், பாளையம்கோட்டை தாலுகா, மருதூர் கிராமம், வடக்கு வீதி, பட்டா எண் 387, நத்தம் சர்வே எண் 227/பகுதி, மறு சர்வே எண் 282/38-இன் கீழ், 0.00.41 ஹெக்டேர் (1.01 சென்ட்) பரப்பளவுள்ள, கிழக்கு நோக்கிய ஓடு வேயப்பட்ட மண் வீடு மற்றும் கதவு எண் 234 கொண்ட வீட்டு மனை. கிழக்கு: தெற்கு வடக்கு முனை மேற்கு: தெற்கு வடக்கு முனை தெற்கு: ஆரோக்கியசாமி நிலம் வீடு வடக்கு: கிழக்கு மேற்கு வீதி					
2.	பரணிகார்த்திகேயன் தமிழகன் (கடன் வாங்கியவர்) சாந்தி தமிழழகன் (இணை கடன் வாங்கியவர்) கணக்கு எண். 125204000016	ரூ. 7,26,479/- 8-மே-2026	ரூ.820074.00/- NPA தேதி: 01-மே-2026	ரூ. 9,68,953.00/- / ரூ. 96,895/-	10 நவம்பர் 2026 (சனிக்கிழமை) (காலை 11:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை)	குறியீட்டு உடைமை
	பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரம்: கரூர் மாவட்டம், கரூர் ஊரக வளர்ச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் துணை ஊரக வளர்ச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கிருஷ்ணராயபுரம் கிராமம், அங்காளம்மன் கோவில் தெரு, நத்தம் சர்வே எண் 117, புஞ்சை ஹெக்டேர் 0.50.5, இதில் ஹெக்டேர் 0.01.34, புஞ்சை ஏக்கர் 0.03-1/3 சென்ட்கள், இதில் மேத்தாய் வீடு, எண் 7A, மதிப்பீட்டு எண் 2808, E.B.S.C. எண் 1376, புதிய நத்தம் சர்வே எண் 117/7, கிழக்கு: மருதநாயகம் வீடு, மேற்கு: 5 அடி அகல தெற்கு - வடக்கு சந்து, தெற்கு: கோவில் வீடு, வடக்கு: கிழக்கு - மேற்கு, அங்காளம்மன் கோவில் தெரு					
3.	மாணிக்கம் எஸ் (கடன் வாங்குபவர்) அருணா எம் (கூட்டுக் கடன் வாங்குபவர்) கணக்கு எண். 1362020100025	ரூ. 6,79,903/- 21-மே-2026	ரூ. 759316.00/- NPA தேதி: 11-மே-2026	ரூ. 32,67,648/- / ரூ. 3,26,764.8/-	10 நவம்பர் 2026 (சனிக்கிழமை) (காலை 11:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை)	நேரடி உடைமை
	பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரம்: விருதுநகர் மாவட்டம், விருதுநகர் மாவட்டப் பதிவு அலுவலகம், குன்னூர் துணைப் பதிவு அலுவலகம், மங்கலம் கிராமம், சர்வே எண் 669/2-இல் உள்ள 23.1/2 சென்ட் (0.09.5 ஹெக்டேர்) நிலம், சர்வே எண் 669/3B-இல் உள்ள 27 சென்ட் (0.11.0 ஹெக்டேர்) நிலம், ஆக மொத்தம் 50.1/2 சென்ட், இதன் மேற்குப் பகுதியில் உள்ள 21.1/2 சென்ட் (0.08.7 ஹெக்டேர்) நிலம். கிழக்கு: மல்லிகை, நிலம் மற்றும் பொதுப் பாதை. மேற்கு: சர்வே எண் 670-இல் உள்ள கிணறு மற்றும் நிலம். தெற்கு சின்னமுனியசாமி மற்றும் பெரியமுனியசாமி வாகயரா நிலம். வடக்கு: சர்வே எண்கள் 669/1A மற்றும் 669/1B-இல் உள்ள நிலம். 1B					

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: மேற்கண்ட ஏலத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் https://altumcredo.co.in/pdf-viewer.php? file=TERMS%20AND%20CONDITIONS%20FOR%20AUCTION.pdf என்ற இணையதளத்தில் கிடைக்கின்றன, மேலும் அவை இந்த ஏல வெளியீட்டின் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டும்.

தேதி: 03-10-2026
இடம்: தமிழ்நாடு

கையொப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஆல்டம் கிரெடோ ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்.

MANAPPURAM HOME FINANCE LTD.

மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 8/596, பத்மபிரபா கட்டிடம், ஸ்ரீராம சுவாமி கோவில் அருகில், சேர்ப்பு-திருப்ரயார் சாலை, திருப்ரயார், திருச்சூர், கேரளா 680567

உடைமை அறிவிப்பு (அசையாச் சொத்துக்காக)

ஏனெனில்,கீழ்க்கையொப்பமிட்டுள்ள நான், நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணைய வட்டியை அமல்படுத்துதல் [சட்டம்], 2002 (2002-இன் 54)-இன் கீழ் மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் ("மஹோஃபின்")-இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக, பிணைய வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 9-உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கடனாளிகள் மற்றும் இணை-கடன் வாங்கியவர்கள், அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் அதன் மீதான வட்டியையும், அந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு அழைப்பு விடுத்து ஒரு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டேன். கடனாளி தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழ்க்கையொப்பமிட்டுள்ள நான், மேற்கூறிய *[சட்டத்தின்] விதி 9-உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13(4)-இன் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் குறியீட்டு உடைமையை எடுத்துக்கொண்டேன் என்று கடனாளிக்கும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. குறிப்பாக கடனாளிக்கும், பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. அந்தச் சொத்துடன் எந்தவொரு கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபட வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. மேலும், அந்தச் சொத்து தொடர்பான எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும், கீழே அந்தந்தச் சொத்துக்களுக்குக் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் கட்டணமே வசூலிக்கப்படும்:

வ எண்.	கடன் வாங்குபவர் மற்றும் இணை-கடன் வாங்குபவரின் பெயர்/ கடன் கணக்கு எண்/கிளை	வட்டி உருவாக்கப்பட்ட பிணைய சொத்தின் விவரம்	கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதி மற்றும் நிலுவைத் தொகை	கைப்பற்றப்பட்ட தேதி
1	கோமதி சிவேந்திரா S, விக்னேஷ் R/ MHL00030020142/ திருச்சி, தமிழ்நாடு	தஞ்சாவூர் பதிவு மாவட்டம், பாதளூர் துணைப் பதிவு மாவட்டம், பாதளூர் தாலுகா, சித்திரக்குடி பஞ்சாயத்து எல்லைக்குள், சித்திரக்குடி கிராமத்தில் அமைந்துள்ள, பட்டா எண் 387, நத்தம் (பழைய சர்வே எண் 331B/29, புதிய சர்வே எண் 331B/109) கொண்ட சொத்தானது, 0.01.33 ஹெக்டேர் (1434 சதுர அடி, 133.26 சதுர மீட்டருக்குச் சமம்) பரப்பளவில், தமிழ்நாட்டிற்குள், அஞ்சல் குறியீடு: 613602-இல் அமைந்துள்ளது. கிழக்கு-சந்து, மேற்கு-மனை எஸ்.பழனிசாமிக்கு சொந்தமானது, தெற்கு-மனை ஆர்.அருமுகம்வகையாராவுக்கு சொந்தமானது, வடக்கு-சாலை	02-07-2026 & ரூ.510907/-	28-09-2026
2	பிச்சம்மாள் ஆறுமுகம், ஆறுமுகம் S/ MLAP0084054146/ தூத்துக்குடி	தமிழ்நாடு, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, வெள்ளங்குளி கிராமத்தின் சர்வே எண் 377/2-இல் அமைந்துள்ள, வெள்ளங்குளி பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட, அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள, 10 சென்ட்களில் 6.99 சென்ட்கள் அளவுள்ள நிலம் மற்றும் அதன் மீது கட்டப்பட்ட ஒரு குடியிருப்பு கட்டிடம். அஞ்சல் குறியீடு: 627426. கிழக்கு-கருத்தப்பாண்டிக்கு சொந்தமான புஞ்சா நிலம்;, மேற்கு-கே.வெல்தேவர் மற்றும் எஸ்.சென்பகவல்லிக்கு சொந்தமான நஞ்சா நிலம்;, தெற்கு-எஸ்.சென்பகவல்லிக்கு சொந்தமான சொத்து மற்றும் பாதை;, வடக்கு-சாலை;	06-07-2026 & ரூ.465550/-	28-09-2026
3	குமாரதாஸ் T, ஜெயா K, ரதீஸ் K/ NLAP0017030909/ நாகர்கோயில்	கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி பதிவு மாவட்டம், பள்ளியடி எஸ்ஆர்ஓ, விளவங்கோடு தாலுக்கா, கொல்லஞ்சி கிராமம் (முன்பு நட்டாலம்), கொல்லஞ்சி கிராமப் பஞ்சாயத்து, 1306.8 சதுர அடிக்கு சமமான 3-சென்ட் பரப்பளவு கொண்ட சொத்தின் அளவு 1306.8-ச.அடி நிலம். கொல்லஞ்சி கிராமப் பஞ்சாயத்தின் கதவு எண்: 1/189A மற்றும் அதன் மீது உள்ள பிற உபகரணங்களைக் கொண்ட கட்டிடம். பழைய சர்வே எண்: 3671, தமிழ்நாடு, அஞ்சல் குறியீடு: 629162. கிழக்கு - சாலை, மேற்கு - தாமோதரன் நாடார் என்பவருக்குச் சொந்தமான சொத்து, தெற்கு - தாமோதரன் நாடார் என்பவருக்குச் சொந்தமான சொத்து, வடக்கு - குட்டி நாடார் என்பவருக்குச் சொந்தமான சொத்து	06-07-2026 & ரூ.1015770/-	28-09-2026
4	கிஜு T, தங்கராஜ் Y, சுலோஜனா L/ NHL00170021363/ நாகர்கோயில்	கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பதிவு மாவட்டம், பாலுகல் எஸ்.ஆர்.ஒ, விதிவங்கோடு தாலுகா, பாலுகல் கிராமம், பாலுகல் நகர பஞ்சாயத்து, பாலுகல் கிராமத்தின் சர்வே எண்: 98/6-இல் அடங்கிய, 2.400 சென்ட் (97.15 சதுர மீட்டருக்கு சமமான) பரப்பளவுள்ள சொத்து, பாலுகல் நகர பஞ்சாயத்தின் கதவு எண்: 13/11 கொண்ட கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த பிற சொத்துகள். பழைய சர்வே எண்: 706, தமிழ்நாடு, அஞ்சல் குறியீடு: 629170. கிழக்கு - பாதை, மேற்கு - பிரேமகுமாரி, பிபிலா பாய் தியோ வல்சலம் ஆகியோருக்குச் சொந்தமான சொத்து, தெற்கு - வல்சலம் மகன் அனில்குமாருக்குச் சொந்தமான சொத்து, வடக்கு - தங்கராஜுக்குச் சொந்தமான சொத்து	06-07-2026 & ரூ.991622/-	28-09-2026

தேதி: 03/10/2026, இடம்: தமிழ்நாடு — கையொப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்